ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




செவ்வாய் ❖ ஆகஸ்ட். 22, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 319 ❖ ரூ.10

## வன்கொடுமையால் உருவான கருவை சுமக்க எப்படி நிர்பந்திக்க முடியும்?

# காட்டம்

## இந்தியச்சமூகத்தில் திருமணத்தைத் தாண்டிய குழந்தைப் பிறப்பு ஒரு பெண்ணுக்கு மன அழுத்தத்தைத் தருகிறது, சிறுமியின் 27 வார கர்ப்பத்தைக் கலைக்க அனுமதியளித்தது; உச்சநீதிமன்றம்

புதுடெல்லி , ஆக. 22-

பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சிறுமி, அவருடைய 27 வார கர்ப்பத்தைக் கலைக்க உச்ச நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. மேலும்,இந்தவழக்கைஉச்ச நீதிமன்றம் ஏற்கெனவே தனது கவனத்துக்குக் கொண்டுவந்த பின்னர் குஜராத் உயர் நீதிமன்றம் பிறப்பித்த ஓர் உத்தரவை சுட்டிக்காட்டி கடுமையான கண்டனத்தையும் பதிவு செய்தது. கூடவே, பாலியல் வன்கொடுமையால் உருவான கருவைச் சுமக்க எப்படி நிர்பந்திக்க முடியும் என்று காட்டமாக கேள்விகளை முன்வைத்துள்ளது.



சிறுமி வழக்கை நேற்று விசாரித்த உச்சநீதிமன்றம், "சிறுமி தனது 27 வார கர்ப்பத்தை கலைக்க இந்த நீதிமன்றம் அனுமதி அளிக்கிறது. அவர் பாருச் மருத்துவமனையில் அனுமதியாகலாம். அங்கே அவருக்கு மேற்படி சிகிச்சை மேற்கொள்ளப்படும்" என்று தெரிவித்துள்ளது.

இந்த உத்தரவைப் பிறப்பித்த நீதிபதிகள் பிவி நாகரத்னா, உஜ்ஜல் புயான் கூறுகையில், "விருப்பமின்றி உருவான கருவை குழந்தையாக பெற்றெடுக்க வேண்டுமா வேண்டாமா என்பதுதான் எங்களின் முன்னால் வந்த வழக்கு. ஆனால்,இதனை குஜராத் உயர் நீதிமன்றம் கருத்தில் கொள்ளவே இல்லை. சம்பந்தப்பட்ட சிறுமி மருத்துவக் குழு முன்னர் ஆஜர்படுத்தப்பட குஜராத் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அவருடைய மருத்துவ அறிக்கை அவர் கர்ப்பத்தைக் கலைப்பதற்கான ஆரோக்கியத்துடன் இருப்பதாகக் கூறியும் அவரை கருக்கலைப்பு செய்து கொள்ள அனுமதிக்காதது ஏற்புடையதல்ல.

இந்தியச் சமூகத்தில் திருமணத்துக்குப் பிந்தைய குழந்தை பிறப்பு மகிழ்ச்சியான தருணமாகக் குடும்பத்தினராலும், சமூகத்தாலும் அங்கீகரிக்கப்படுகிறது. ஆனால் திருமணத்தைத் தாண்டிய் குழந்தைப் பிறப்பு ஒரு பெண்ணுக்கு மன அழுத்தத்தைத் தருகிறது. இந்த நீதிமன்றம் பல்வேறு வழக்குகளிலும் ஒரு பெண்ணுக்கு அவர் உடலின் மீது முழு உரிமை இருக்கிறது என்பதை வலியுறுத்தியுள்ளது" என்றனர்.

நீதிபதி பூயான் கூறுகையில், சிறுமியின் கர்ப்பத்தைக் கலைக்கக் கூடாது என்று உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு அரசியல் சாசனத்துக்கு எதிரானது. பாலியல் வன்கொடுமையால் உருவான கருவை எப்படி சுமந்து பெற்றெடுக்க நிர்பந்திக்க முடியும் என்று குஜராத் உயர் நீதிமன்றத்துக்கு சரமாரி கேள்விகளை முன்வைத்தார்.

சிறுமிக்கு கருக்கலைப்பு செய்தபின்னர் கரு உயிருடன் இருப்பது தெரிந்ததால் அந்தக் கருவை மருத்துவமனை இன்குபேட்டரில் வைத்து வளர்த்து குழந்தையை சட்டப்படி தத்துக் கொடுக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவினை தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடுவது குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, இ.பெரியசாமி, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் இரா. செல்வராஜ், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்புப் பணி அலுவலர் என்.சுப்பையன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



▶ புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக/ நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து 26.08.2023 அன்று நடத்தப்பட உள்ள சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, தலைமையில் நேற்று நடைபெற்றது.

## தமிழகத்தில் தலைதூக்கும் வெடிகுண்டு கலாசாரம்: அண்ணாமலை கண்டனம்

சென்னை , ஆக. 22-

“தமிழகத்தில் திமுக ஆட்சிக்கு வந்த பிறகு தலைதூக்கியுள்ள வெடிகுண்டு கலாசாரம், தற்போது கல்லூரி மாணவர்களுக் கிடையேயும் பரவியிருப்பது, தமிழகம் எத்தனை மோசமான நிலையில் இருக்கிறது என்பதைக் காட்டுகிறது” என்று பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை கண்டனம் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளிட்டுள்ள பதிவில், "சென்னை வேளச்சேரியில் தனியார் கல்லூரி மாணவர்களுக் கிடையேயான பிரச்சினையில், நாட்டு வெடிகுண்டு வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியடைந்தேன். தமிழகத்தில் திமுக ஆட்சிக்கு வந்த பிறகு தலைதூக்கியுள்ள வெடிகுண்டு கலாசாரம், தற்போது கல்லூரி மாணவர்களுக் கிடையேயும் பரவியிருப்பது, தமிழகம் எத்தனை மோசமான நிலையில் இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. கஞ்சா, வெடிகுண்டு உள்ளிட்டவை தமிழகத்தில் எளிதாகக் கிடைக்கிறது. தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு இதற்கு மேலும் சீர்கெட முடியாது.

உடனடியாக இந்தச் சம்பவத்தின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பதை உரிய விசாரணை நடத்தி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், வெடிகுண்டு கலாச்சாரத்தை மீண்டும் தலைதூக்க விடாமல் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் தமிழக பாஜக சார்பாக முதல்வர் ஸ்டாலினை வலியுறுத்துகிறேன்" என்று அவர் பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, சென்னை வேளச்சேரியில் உள்ள தனியார் கல்லூரியில் மாணவர்கள் இடையே பிரச்சினை இருந்து வந்துள்ளது. இந்நிலையில், மாணவர்களில் ஒரு பிரிவினர், திங்கள்கிழமை காலை கல்லூரி வாசலில் மர்மப் பொருளை வீசி வெடிக்கச் செய்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து இந்த சம்பவம் குறித்து விசாரித்து வரும் வேளச்சேரி காவல்துறையினர், சம்பந்தப்பட்ட கல்லூரியைச் சேர்நத் 4 மாணவர்களிடம் விசாரணை நடத்தி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

## மதுரை அதிமுக மாநாட்டின்

# வெற்றியை ஜீரணிக்க முடியாதவர்கள் சாப்பாடு பிரச்சனையை கிளப்புகின்றார்கள் ஜி.கே.வாசன்



**புதுக்கோட்டை, ஆக. 22-**

**மதுரை அதிமுக மாநாட்டின் வெற்றியை ஜீரணிக்க முடியாதவர்கள் சாப்பாடு பிரச்சனையை கிளப்புகின்றார்கள்,இந்த மாநாடு எடப்பாடி பழனிசாமிக்கு நம்பிக்கையை கொடுத்துள்ளது இது நாடாளுமன்ற தேர்தலுக்கான வெற்றிக்கு அடித்தளமிடும் மாநாடாக அமைந்துள்ளது. என புதுக்கோட்டையில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே. வாசன் தெரிவித்தார்.**

புதுக்கோட்டை திருவப்பூரில் உள்ள பிவிஆர் திருமண மண்டபத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் நிறுவனர் ஜி.கே.மூப்பனாரின் 92 வது பிறந்த நாளை முன்னிட்டு விவசாயிகள் கருத்தரங்கு நடைபெற்றது. இந்த கருத்தரங்கிற்கு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே. வாசன் வருகை தந்தார். அவரை கட்சி நிர்வாகிகள் இருசக்கர வாகன பேரணி மூலம் வரவேற்பு அளித்து கருத்தரங்கு நடைபெறும் இடத்திற்கு அழைத்து வந்தனர்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்த வாசன் கூறுகையில்: காவிரி வைகை குண்டாறு திட்டம் போதிய நிதி ஒதுக்காமல் 3கிமீ கால்வாய் வெட்டியதுடன் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதை அரசியல் நோக்கத்தோடு பார்க்காமல் விவசாயிகளின் நலன் கருதி தமிழ்நாடு அரசு உரிய நிதி ஒதுக்கி நிறைவேற்ற வேண்டும். நிலம் கையபடுத்த பட்டவர்களுக்கு உரிய சந்தை விலையை வழங்க வேண்டும். அறுவடை காலத்திலேயே கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும் மழைக்காலம் நெருங்குவதால் தார்பாய்கள் தயாராக வைத்துக்கொள்ள வேண்டும். தேங்காய் கொப்பரை கொள்முதலை அரசு முறையாக செய்ய வேண்டும் தேங்காய் எண்ணெய்யை கொள்முதல் செய்து ரேசன் கடைகளில் பாமாயிலுக்கு பதிலாக வழங்க வேண்டும்.

காவிரி மேலாண்மை வாரியத்தின் உத்தரவை கர்நாடகா அரசு மீறுகிறது திமுக கூட்டணியில் இருப்பதால் அதை வேடிக்கை பார்க்கிறது. இந்த பிரச்சனையில் அரசியல் பார்க்கப் வேண்டிய அவசியம் கிடையாது. விவசாயிகள் லாபம் நஷ்டம் பார்ப்பதில்லை, அவர்கள் பார்த்தால் ஈரத்துணி தான் நாம் கட்டிக்கொள்ள வேண்டும். விவசாயிகளின் நலனில் அக்கறை உள்ள அரசாக ஒன்றிய அரசு உள்ளது. விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களை ஒன்றிய அரசு வழங்கி வருகிறது.

நீட் தேர்வை வைத்து கொண்டு திமுக நாடகம் நடத்துகிறது. அரசியல் செய்கிறது. படிக்க வேண்டும் என்று நினைக்க கூடிய மாணவர்களை பின்னுக்கு தள்ளுகிறார்கள். அரசியலுக்காக உண்ணாவிரதம் இருந்து அவர்களது அரசியல் நாடகம் என்பது பிள்ளையை கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டுவதை போல் உள்ளது.கச்சத்தீவு பிரச்சனையில் சில கசப்பான உண்மைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும், முழுப்பூசனிக்காயை சோற்றில் மறைக்க முடியாது, மீண்டும் மீண்டும் மக்களை ஏமாற்ற திமுக ஏமாற்ற நினைத்தால், மக்கள் விழித்துக்கொள்வார்கள், வருகின்ற தேர்தலில் மக்கள் திமுகவிற்கு எதிராக வாக்களிப்பார்கள், தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கவலைக்கிடமாக உள்ளது.

மதுரை அதிமுக மாநாட்டின் வெற்றியை ஜீரணிக்கமுடியாதவர்கள் சாப்பாடு பிரச்சனையை கிளப்புகின்றார்கள்,இந்த மாநாடு எடப்பாடி பழனிசாமிக்கு நம்பிக்கையை கொடுத்துள்ளது இது நாடாளுமன்ற தேர்தலுக்கான வெற்றிக்கு அடித்தளம் இடும் மாநாடாக அமைந்துள்ளது என்று தெரிவித்தார். கூட்டத்தில் மாவட்டத் தலைவர்கள் தமிழரசன், மோகன்தாஸ், விவசாய அணி மாநில தலைவர் துவார் ரெங்கராஜன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றிருந்தனர்.



▶ மதுரை மாநகராட்சி சுகாதாரக் குழுத் தலைவர் தா. ஜெயராஜ் இல்ல திருமணம், மணமகன் - ஜாம்சன் பிரகாஷ், மணமகள் - ஜெனிபர் மரியா இவர்களது திருமணம் மதுரை அண்ணா நகர் அன்னை வேளாங்கண்ணி தேவாலயத்தில் மேதகு பேராயர் அந்தோணி பாப்பு சாமி தலைமையிலும், அருட்தந்தை எட்வின் சகாயராஜ், ஜார்ஜ், சந்தோஷ், வின்செண்ட் ஆகியோர் முன்னிலையில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. திருமண வரவேற்ப்பில் தி.மு.க. மாவட்டச் செயலாளர், வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி மணமக்களை வாழ்த்தி வரவேற்றார். நிகழ்வில் தி.மு.க. வை சார்ந்த மேயர் இந்திராணி, துணை மேயர் நாகராஜன், முன்னாள் மேயர் குழந்தை வேலு, முன்னாள் மாவட்டச் செயலாளர் வேலுச்சாமி, மண்டல தலைவர் முகேஷ் வர்மா, மாவட்டத் துணைச் செயலாளர் மூவேந்திரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மண்டலத் தலைவர்கள், திமுக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி சிறப்பித்தனர்.

# இன்று

# 22-8-23



ஷஷ்டி விரதம்

சக வருடம் 1945 சிராவணம் 31

| சோபகிருது ஆவணி 5 | AUG - TUE செவ்வாய் | ச:ஃபர் 4 | இராசிபலன் |
|---|---|---|---|
| | | வளர்பிறை 234 / 131 | |

வளர். ஷஷ்டி 43.22 (மா.11.26) சுவாதி 58.16 (கா.05.23) தியாஜ் 10.42 அகஸ் 30.47 சித்த 58.16 மேல் மரண. ஷஷ்டி விரதம். மதுரை ஸ்ரீசொக்கநாதர் தருமிக்கு பொற்கிழியருளிய காட்சி. ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீபெரியாழ்வார் புறப்பாடு. குறுக்குத்துறை முருகப் பெருமான் புறப்பாடு. சென்னை தினம்.

| | நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.45-8.45 | 1.45-2.45 | 03.00 | 12.00 | 09.00 |
| மாலை | 4.45-5.45 | 7.30-8.30 | 04.30 | 01.30 | 10.30 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்; சிம்ம லக்னம் இருப்பு நா. 4 வி. 34; சந்திராஷ்டமம் ரேவதி; கரணம் : 7.30-9; சூரிய உதயம் : 6.05

இராசிபலன்: மேஷம் - அமைதி; ரிஷபம் - நன்மை; மிதுனம் - இன்பம்; கடகம் - வெற்றி; சிம்மம் - மேன்மை; கன்னி - தனம்; துலாம் - உயர்வு; விருச்சி - வரவு; தனுசு - கவலை; மகரம் - பயம்; கும்பம் - செலவு; மீனம் - பணிவு

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

தட்டிப் பறிப்பவன்
வாழ்ந்ததில்லை..!
விட்டுக் கொடுப்பவன்
வீழ்ந்ததில்லை..!


புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை– 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,450 | Rs. 5,920 |


# உத்தராகண்டில் 5 மாவட்டங்களுக்கு அதி கனமழை எச்சரிக்கை இமாச்சலுக்கு ஆரஞ்சு அலர்ட்



சிம்லா , ஆக. 22-

இமாச்சலப் பிரதேசம் மற்றும் உத்தராகண்ட் மாநிலங்களில் நேற்று கனமழை பெய்தையடுத்து வரும் 24 ஆம் தேதி வரை இவ்விரு மாநிலங்களுக்கும் ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

ஆரஞ்சு அலர்ட் என்றால் 24 மணி நேரத்துக்கு 115.6 மில்லி மீட்டரிலிருந்து 204.4 மில்லி மீட்டர் வரை பெய்யும் மழை/பனிப்பொழிவுபெய்யும் என்பதைக் குறிப்பதாகும். இந்த மழையினை பெரு மழை அல்லது மிகக் கனமழை (Very Heavy Rainfall) என்கின்றனர். ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டால் மழையால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்று அறிந்து கொள்ளலாம். எனவே, எச்சரிக்கையுடன் தயார் நிலையில் இருக்க வேண்டும்.


இமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட் ஆகிய இரு இமயமலை மாநிலங்களிலும் கடந்த சில மாதங்களாக இடைவிடாமல் பெய்யும் மழை காரணமாக மிகப் பெரிய அளவில் பொருள் மற்றும் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. இமாச்சலப் பிரதேசம், உத்தராகண்டில் இதுவரை மழை, வெள்ள பாதிப்புகளில்உயிரிழந்தோரின் எண்ணிக்கை 88 ஆக அதிகரித்துள்ளது.

வானிலை ஆய்வு மையத்தின் அண்மை அறிவிப்பின்படி இமாச்சலில் பருவமழையின் தீவிரம் சற்றே குறைந்துள்ளது. இருப்பினும் அடுத்த இரண்டு நாட்களுக்கு ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முந்தினம் ஞாயிறன்று மாநிலத்தின் சில பகுதிகளில் மிதமான மழை பெய்தது. சம்பா, மாண்டி மாவட்டங்களில் ஆகஸ்ட் 26 வரை மழை, வெள்ளத்துக்கு வாய்ப்புள்ளது என்று கணிக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக நிலச்சரிவு, திடீர் வெள்ளப் பெருக்கு, பயிர்ச் சேதம், பழச்செடிகள் சேதம், விதைகப்பட்ட பயிர்கள் அழுகிப்போதல் போன்ற பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக வானிலை ஆய்வுமையம்தெரிவித்துள்ளது.

உத்தராகண்ட் மாநிலத்தில் டேராடூன், பாரி, நைனிடால், சம்பாவாட், பாகேஸ்வர் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் இன்று அதிகனமழை பெய்யக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. வானிலை ஆய்வு மையம் இந்த மாவட்டங்களுக்கு ஆரஞ்சு அலர்ட் விடுத்துள்ளது. மற்ற மாவட்டங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவித்துள்ளது.

# சந்திரயான்–3 நிலவில் தரையிறங்குவதில் எந்த சிக்கலும் இருக்காது இஸ்ரோ




புதுடெல்லி , ஆக. 22-

சந்திரயான்-3 நிலவில் தரையிறங்குவதில் எந்த சிக்கலும் இருக்காது என்று இஸ்ரோ தலைவரும், விண்வெளித் துறை செயலாளருமான எஸ். சோம்நாத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரோ தலைவரும், விண்வெளித் துறை செயலாளருமான எஸ். சோம்நாத், மத்திய விண்வெளித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்கை நேற்று புதுடெல்லியில் சந்தித்து, நாளை மாலை, சந்திரயான்-3 நிலவில் தரையிறங்குவதற்கான தயார்நிலை குறித்து விளக்கினார். சந்திரயான் -3 விண்கலத்தின் வலுவான நிலை குறித்து விளக்கிய இஸ்ரோ தலைவர், அதன் அனைத்து கருவிகளும் சரியாக செயல்படுவதாகத் தெரிவித்தார். மேலும், புதன்கிழமை அன்று எந்தவொரு சிக்கலும் ஏற்படாது என்றும் அவர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

அடுத்த இரண்டு நாட்களில், சந்திரயான்-3 விண்கலத்தின் செயல்பாட்டு நிலை தொடர்ந்து கண்காணிக்கப்படும் எனவும், நிலவில் தரையிறங்குவதற்கான இறுதி நிலை தொடர்பாக இரண்டு நாட்களுக்கு முன்பே பதிவேற்றங்கள் செய்யப்பட்டு சோதித்துப் பார்க்கப்படும் என்றும் எஸ். சோம்நாத் தெரிவித்தார். சந்திரயான்-3 நிலவில் மென்மையான முறையில் தரையிறக்கம் செய்யப்படும் என்று தெரிவித்த இணையமைச்சர் ஜிதேந்திர சிங், பிரதமர் நரேந்திர மோடியின் வழிகாட்டுதலின் கீழ் விண்வெளி ஆராய்ச்சியில் ஒரு புதிய வரலாறு எழுதப்படும் என்று கூறினார்.

சந்திரயான் -3, 23.08.2023 அன்று இந்திய நேரப்படி மாலை 06:04 மணியளவில் நிலவில் தரையிறங்கும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது. ஏற்கனவே சந்திரயான்-2 லேண்டர், தொடர்பை இழந்த நிலையில், பகுதி அளவு மட்டுமே வெற்றிகரமாக இருந்தது. இந்நிலையில் சந்திரயான் -3 விண்கலத்தில் உள்ள லேண்டர் தொகுப்புக்கும் இன்னமும் சுற்றி வரும் சந்திரயான்-2 விண்கலத்தின் ஆர்பிட்டருக்கும் இடையே இருவழி தகவல் தொடர்பை இஸ்ரோ வெற்றிகரமாக நிறுவியுள்ளது. முன்னதாக, சந்திரயான் -3 எடுத்த நிலவின் தொலைதூரப் பகுதியின் புதிய படங்களை இஸ்ரோ நேற்று பகிர்ந்தது.

சந்திராயன் -3 தனது நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவு செய்யும்பட்சத்தில், அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவுக்குப் பிறகு, நிலவு தொடர்பான ஆய்வுகளைமேற்கொண்டு சாதனைகளைப் படைக்கும் உலகின் நான்காவது நாடாக இந்தியா திகழும். அத்துடன் நிலவின் தென் துருவத்தில் விண்கலத்தை தரையிறக்கிய உலகின் ஒரே நாடாக இந்தியா திகழும். சந்திரயான்-3 திட்டம் மூன்று முக்கிய நோக்கங்களைக் கொண்டது, நிலவின் மேற்பரப்பில் பாதுகாப்பான மற்றும் மென்மையான தரையிறக்கத்தை மேற்கொள்ளுதல், நிலவில் ரோவர் சுற்றுவதை விளக்குவது மற்றும் அறிவியல் சோதனைகள் நடத்துவது ஆகியவை ஆகும்.

சந்திரயான் தொடரின் முதல் விண்கலமான சந்திரயான்-1, நிலவின் மேற்பரப்பில் நீர் இருப்பதைக் கண்டறிந்த பெருமைக்குரியது எனவும் இதை அமெரிக்காவின் நாசா உள்ளிட்ட உலகின் முன்னணி விண்வெளி நிறுவனங்கள் தங்களது சோதனைகளுக்கு இந்த தகவல்களைப் பயன்படுத்தியுள்ளதாகவும் ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார். ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து ஜிஎஸ்எல்வி மார்க் 3 (எல்விஎம் 3) ராக்கெட் மூலம் சந்திரயான்-3 விண்கலம் கடந்த 14-ம் தேதி பிற்பகல் 2.35 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.


கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437




இரண்டாம் சர்வதேச ஓபன் கராத்தே சாம்பியன்ஷிப் 2023 போட்டி கோயம்புத்தூர் உடுமலைப்பேட்டையில் நடைபெற்றது,இந்த சர்வதேச கராத்தே போட்டியில் சென்னை சார்பாக ஹன்சி ஆனந்தன், போஜரே கராத்தே டு பெடரேஷன் ஆஃப் இந்தியா. மீஞ்சூர் கோயாசி, 7வது டான் பிளாக் பெல்ட் யு.சரவணன், ஆகியோர் திமுக 41வது முன்னாள் வட்ட பொறுப்பு குழு உறுப்பினரும், 6வது டான் பிளாக் பெல்ட் சியான் என். லாசர். தலைமையில் கலந்து கொண்ட மாணவர்கள் சர்வதேச கராத்தே போட்டியில் வெற்றி பெற்றனர். வெற்றி பெற்ற மாணவர்கள்,ஆர் கே நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே. எபினேசர் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

# தமிழக அரசியலில் அதிமுக மாநாடு எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது வைகோ கருத்து



சிவகாசி , ஆக. 22-

அதிமுக மாநாடு தமிழக அரசியலில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

சிவகாசியில் நாரணாபுரம் சாலையில் கட்டப்பட்டுள்ள லலிதா திருமண மஹால் திறப்பு விழா ஞாயிற்றுகிழமை நடைபெற்றது. மஹால் உரிமையாளர்கள் தன பாலன், குமரேசன் வரவேற்றனர். மதிமுக பொதுச் செயலாளர் வைகோ மஹாலை திறந்து வைத்தார்.

பின்னர் அவர் பேசியதாவது: அதிமுக மாநாடு தமிழக அரசியலில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. திராவிட மாடல் ஆட்சியை முதல்வர் ஸ்டாலின் சிறப்பாக நடத்தி வருகிறார். அரசியலில் பணம் கொடுத்தால்தான் வெற்றி பெற முடியும் என்ற சூழ்நிலை உள்ளது.

சிவகாசி எம்பியாக இருந்த போது இன்டர் நெட் திட்டம், விருதுநகர் – கொல்லம் அகல ரயில் பாதை திட்டத்தை மத்திய அரசிடம் கேட்டுப் பெற்று செயல்படுத்தினேன். பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்கள் பிரச்சினைகளுக்காக தொடர்ந்து பாடுபடுவேன். மதுரையில் செப்டம்பரில் நடைபெறும் மாநாட்டில் தொண்டர்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று பேசினார்.

ஈரோடு எம்பி கணேச மூர்த்தி, மதிமுக துணை பொதுச் செயலாளர் ராஜேந்திரன், முன்னாள் எம்.பி சிப்பிப் பாறை ரவிச் சந்திரன், அசோகன் எம்.எல்.ஏ., மேயர் சங்கீதா, துணை மேயர் விக்னேஷ் பிரியா, ஒன்றியக் குழு துணை தலைவர் விவேகன் ராஜ், காளீஸ்வரி குழும இயக்குநர் ஏ.பி.எஸ்.செல்வராஜன், மதிமுக மத்திய மாவட்டச் செயலாளர் ரவிச்சந்திரன், மாநகர செயலாளர் ராஜேஷ், நாரணாபுரம் எஸ்.எஸ். பிரபாகரன் பங்கேற்றனர்.

# ஆபாச படங்களை நீக்குவதில் தாமதம் ஃபேஸ்புக் மீது கேரள காவல் துறை கிரிமினல் வழக்குப் பதிவு

திருவனந்தபுரம் , ஆக. 22-

ஃபேஸ்புக் சமூக வலைதளத்தில் இடம்பெற்றுள்ள ஆபாச படங்களை நீக்க தாமதித்த காரணத்துக்காக, அந்தத் தளத்தின் மீது வழக்குப் பதிவு செய்துள்ளது கேரள மாநில காவல் துறை.

பெண் மனநல மருத்துவர் ஒருவரின் ஃபேஸ்புக் பக்கத்தில் ஹேக்கர்களால் ஆபாச புகைப்படங்கள் பகிரப்பட்டுள்ளது. அதை நீக்குமாறு எழுத்துபூர்வமாக கேரள காவல் துறை, மெட்டாவிடம் தெரிவித்துள்ளது. அதன்மீதுஎந்தநடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் அந்நிறுவனத்தின் மீது தற்போது வழக்குப் பதிவு செய்துள்ளது காவல் துறை. இந்த விவகாரம் தொடர்பாக ஃபேஸ்புக் இந்திய நோடல் அதிகாரியை கைது செய்யும் நகர்வுகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிகிறது. சம்பந்தப்பட்ட பெண்ணின் ஃபேஸ்புக் பக்கம் மட்டுமே ஹேக் செய்யப்பட்டுள்ளது. அவரது ப்ரொஃபைல் ஹேக் செய்யப்படவில்லை. ஃபேஸ்புக் பக்கம் ஹேக் செய்யப்பட்ட காரணத்தால் அதில் பகிரப்பட்ட ஆபாச படங்களை சைபர் குற்றப்பிரிவு காவல் அதிகாரிகளால் நீக்க முடியவில்லை எனத் தெரிகிறது. அதையடுத்து தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் 79-வது பிரிவின் கீழ் ஃபேஸ்புக் தளத்தை நிர்வகித்து வரும் மெட்டா நிறுவனத்துக்கு காவல் துறை தரப்பில் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அதில், இந்த வேலையை செய்த ஹேக்கரை அடையாளம் காணவும், அந்தப் பக்கத்தில் பகிரப்பட்ட படங்களை நீக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில்சட்டத்துக்கு உட்பட்டு நோட்டீஸ் பெறப்பட்ட 36 மணி நேரத்துக்குள் ஃபேஸ்புக் தளத்தில் இருந்து அந்தப் படங்களை நீக்க வேண்டும். ஆனால், ஒரு வாரம் கடந்தும் ஃபேஸ்புக்கில் அந்தப் படங்கள் நீக்கப்படவில்லை எனத் தெரிகிறது. இதையடுத்தே வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது போன்ற வழக்குகளில் மத்திய உள்துறை அமைச்சகத்தின் அனுமதியுடன் ஃபேஸ்புக்கின் அமெரிக்க தலைமையகத்துக்கு காவல் துறை நோட்டீஸ் அனுப்ப வேண்டும். இது இரு நாட்டு ஒப்பந்தத்தின்படி மேற்கொள்ளப்பட வேண்டிய நெறிமுறைகளின் ஒரு பகுதியாகும். அனைத்து சைபர் குற்றங்களிலும் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வருவதால் போலீஸாருக்கு இதுபோன்ற வழக்குகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

## மதுரையில் ரூ.400 கோடி செலவிலான

# அதிமுகவின் ஆடம்பர மாநாட்டால் யாருக்கும் பலனில்லை டி.டி.வி. தினகரன்



சிவகங்கை, ஆக. 22-

''மதுரையில் ரூ.400 கோடி செலவழித்து ஆடம்பரமாக நடத்திய மாநாட்டால் யாருக்கும் பலனில்லை '' என சிவகங்கையில் அமமுக பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் தெரிவித்தார்.

சிவகங்கையில் கட்சி நிர்வாகி இல்ல நிகழ்ச்சியில் பங்கேற்ற தினகரன், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மதுரையில் பணம் கொடுத்து மக்களை கூட்டி வந்து ஆடம்பரமாக நடத்திய மாநாட்டால் மக்களுக்கும், நடத்தியவர்களுக்கும் பலனில்லை. வெற்று விளம்பரத்துக்காக ரூ.400 கோடி செலவழித்து மாநாடு நடத்தி உள்ளனர்.

உதயநிதி ஸ்டாலினால் நீட் தேர்வை ரத்து செய்ய முடியும் என்றால் ஏன் உண்ணாவிரதம் இருக்க வேண்டும்? பழனிசாமி ஆட்சி ஜெயலலிதாவின் ஆட்சி இல்லை என்பதால்தான் திமுகவை மக்கள் தேர்வு செய்தனர். ஆனால் பழனிசாமிக்கு சற்றும் சளைத்தவர் அல்ல என்பதை ஸ்டாலின் நிரூபித்து கொண்டிருக்கிறார். ஸ்டாலின், பழனிசாமி ஆகிய இருவரும் ஒரே குணாதிசயங்களை கொண்டவர்கள்.

அவர்களுக்கு மாற்றாக அமமுகவை மக்கள் உறுதியாக தேர்ந்தெடுப்பர். உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்தை நடிகர் ரஜினி துறவியாக நினைத்து காலில் விழுந்து ஆசி பெற்றிருப்பார். அதில் தவறு இல்லை. நானே அவரை (யோகி ஆதித்யநாத்) துறவியாகத்தான் பார்க்கிறேன். பாஜக ஊழல் செய்ததா, இல்லையா என்பதை வருகிற மக்களவை தேர்தலில் தெரிந்துகொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# தக்காளியைத் தொடர்ந்து நேற்று முதல் வெங்காயம் மானிய விலையில் விற்பனை



புதுடெல்லி , ஆக. 22-

தக்காளியைத் தொடர்ந்து நேற்று திங்கள்கிழமை முதல் தலைநகர் டெல்லியில் வெங்காயத்தை மானிய விலையில் விற்கவுள்ளதாக தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. அரசாங்கத்தின் காப்பு இருப்பில் (பஃபர் ஸ்டாக்) இருந்து பெரிய வெங்காயத்தை கிலோ ரூ.25-க்கு விற்பதாக அறிவித்துள்ளது.

ஏற்கெனவே தக்காளியை மானிய விலையில் மத்திய அரசு விற்பனை செய்து வருகிறது. சமையலில் அத்தியாவசியப் பொருளான வெங்காயத்தின் விலை கட்டுக்குள் வைத்துக்குள் அரசாங்கம் 2023 - 24 நிதியாண்டில் காப்பு இருப்பு வெங்காயத்தின் அளவை 3 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. மேலும் இன்னும் 2 லட்சம் டன் வெங்காயத்தை இந்த ஆண்டில் கொள்முதல் செய்யவும் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பின் நிர்வாக இயக்குநர் அனீஷ் ஜோசப் சந்திரா கூறுகையில், "ஆரம்பகட்டமாக நாங்கள் டெல்லியில் காப்பு இருப்பு வெங்காயத்தை சில்லறை விற்பனைக்குக் கொண்டு வருகிறோம். நடமாடும் வாகனங்கள் மூலம் வெங்காயத்தை கிலோ ரூ.25-க்கு விற்பனை செய்யவுள்ளோம். டெல்லியில் நேற்று முதல் 10 நடமாடும் வேன்கள் மூலம் விற்பனை தொடங்கும். இது படிப்படியாக அதிகரிக்கப்படும். அதுதவிர ஓஎன்டிசி (Open Network for Digital Commerce) வாயிலாக ஆன்லைனில் வெங்காய விற்பனைக்கான சாத்தியக்கூறுகளும் ஆராயப்பட்டு வருகின்றன.

சில்லறை விற்பனையில் வெங்காய விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் டெல்லி, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, இமாச்சலப் பிரதேசம் மற்றும் அசாமில் சந்தை தலையீடு தேவைப்படுகிறது என அரசாங்கம் கணித்துள்ளது. இந்த ஐந்து மாநிலங்களிலும் வெங்காய விற்பனை சீராக இருப்பதை உறுதி செய்ய காப்பு இருப்பில் இருந்து வெங்காயம் மொத்த மற்றும் சில்லறை விற்பனை சந்தைக்கு அனுப்பப்படுகிறது.

மொத்த விற்பனை சந்தைக்கு காப்பு இருப்பு வெங்காயம் சந்தை விலைக்கும், சில்லறை விற்பனையகங்களுக்கு மானியத்துடன் கிலோ ரூ.25 என்ற விலையிலும் விற்பனை செய்யப்படுகிறது" என்றார். அரசாங்க புள்ளிவிவரத்தின்படி இந்தியாவில் சராசரியாக வெங்காய விலை 19 சதவீதம் அதிகரித்துள்ளது.

ஏப்ரல் - ஜூன் மாதங்களில் அறுவடை செய்யப்படும் ராபி வெங்காயம், இந்தியாவின் வெங்காய உற்பத்தியில் 65 சதவீதத்தைக் கொண்டுள்ளது மற்றும் காரீஃப் பயிர் அக்டோபர்- நவம்பர் மாதங்களில் அறுவடை செய்யப்படும் வரை நுகர்வோரின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. ஆனால் இந்த ஆண்டு வடமாநிங்களில் பெய்த கனமழை காரணமாக ராபி வெங்காய அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது.

வெங்காய ஏற்றுமதிக்கு வரி: இந்நிலையில், டிசம்பர் 31, 2023 வரை உள்நாட்டுச் சந்தையில் வெங்காயத்தின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தவும், விநியோகத்தை மேம்படுத்தவும் வெங்காய ஏற்றுமதிக்கு 40 சதவீத வரியை அரசாங்கம் கடந்த சனிக்கிழமை விதித்தது. செப்டம்பரில் வெங்காயத்தின் விலை உயர வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் ஏற்றுமதி வரி விதிக்கப்பட்டதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனை வெங்காய விற்பனை கூட்டமைப்புகள் கடுமையாக எதித்து வருகின்றன.

# சிறுவாபுரி அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் வருடாபிஷேக விழா நடைபெற்றது




ஊத்துக்கோட்டை, ஆக22-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி அருகே சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரி கிராமத்தில் புகழ்பெற்ற அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் உள்ளது. இந்துசமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்த திருக்கோயிலுக்கு கடந்த 2022-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் தேதி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

மூலவர், விநாயகர், ஆதிமூலவர், அண்ணாமலையார், உண்ணாமலை அம்மன், உள்ளிட்ட சந்நிதிகள் புதுப்பிக்கப்பட்டு, கருங்கல் தரைதளம் அமைத்து, பக்தர்கள் விரைவாக தரிசனம் செய்ய எஸ்.எஸ்.கியூ லைன் அமைத்தல் உள்ளிட்ட திருப்பணிகள் ரூ.1.25 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன் பின்னர், 48 நாட்கள் மண்டல அபிஷேக விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிலையில், ஆங்கில நாள்காட்டியின்படி மகா கும்பாபிஷேகம் நடைபெற்று ஒரு வருடம் நிறைவு பெற்றது. எனவே, நேற்று இக்கோவிலில் வருடாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது. இதை முன்னிட்டு நேற்று காலை 7 மணிக்கு யாகசாலை பூஜைகள் துவங்கியது. காலை 8 மணிக்கு விநாயகர், ஆதிமூலவர், அண்ணாமலையார், உண்ணாமலை அம்மன் உள்ளிட்ட பரிவாரம் மூர்த்திகளுக்கு மகா அபிஷேகம் கோவிலின் தலைமை குருக்கள் ஆனந்தன் குருக்கள் தலைமையில் நடைபெற்றது, இதன் பின்னர், மூலவர் பாலசுப்ரமணிய சுவாமிக்கு மகா அபிஷேகம் நடைபெற்றது.

இதன் பின்னர், கோவில் வளாகத்தில் கலசங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு மகாபூர்ணாகுதி நடைபெற்றது. இதன் பின்னர், புனித நீர் அடங்கிய கலசங்களை ஊர்வலமாக கொண்டு வந்து மூலவருக்கு அபிஷேகம் செய்தனர். இதன் பின்னர், மூலவருக்கு ராஜ அலங்காரம், விநாயகர், ஆதிமூலவர், அண்ணாமலையார், உண்ணாமலை அம்மனுக்கு புஷ்ப அலங்காரம். உற்சவருக்கு கல்நகை-புஷ்ப அலங்காரம் செய்யப்பட்டது. இதன் பின்னர், மகா தீபாராதனை நடைபெற்றது. பின்னர், பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோவிலின் செயல் அலுவலர் செந்தில்குமார் தலைமையில் திருக்கோவில் பணியாளர்களும், ஊழியர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.



▶ மதுரை கொன்னவாயன்சாலை, அருள்மிகு ஸ்ரீஆலமரம் முனீஸ்வரர் திருக்கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெற்றது. கும்பாபிஷேகத்தை தொடர்ந்து முனீஸ்வரருக்கு மஹா தீபாராதனை நடைபெற்றது. இதனை தொடர்ந்து காலை 8 முதல் மாலை 6 மணிவரை பக்தர்களுக்கு அன்னதானம் நடைபெற்றது, கும்பாபிஷேகத்தில் திரளான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# தமிழகத்தில் முக அடையாள தொழில்நுட்பத்தை பயன்படுத்த தடை கோரிய வழக்கு

## அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு



சென்னை, ஆக22-

தமிழகத்தில் முக அடையாள தொழில்நுட்பத்தை பயன்படுத்த தடை விதிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் தமிழக உள்துறைச் செயலாளர், சென்னை காவல் ஆணையர் பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், சென்னையைச் சேர்ந்த அகிலேஷ் குமார் கந்தசாமி என்பவர் தாக்கல் செய்த பொதுநல மனுவில், "குற்ற வழக்குகளில் சந்தேகிக்கப்படும் நபர்களை அடையாளம் காண்பதற்காக, முக அடையாள தொழில்நுட்பம், கடந்த 2021ம் ஆண்டு அக்டோபர் 4ம் தேதி தமிழக முதல்வரால் அறிமுகம் செய்யப்பட்டது. கடந்த 2022ம் ஆண்டு மார்ச் 7ம் தேதி பெசன்ட்நகர் கடற்கரைக்கு சென்று திரும்பிய தன்னையும், தனது சகோதரரையும் தடுத்து நிறுத்திய போலீசார் தங்களின் அனுமதியைக் கேட்காமல் புகைப்படம் எடுத்தனர். அந்த புகைப்படங்களை மாநில டேட்டா மையத்தில் பதிவேற்றம் செய்துள்ளனர்.

இது எனது தனிப்பட்ட உரிமையில் தலையிடும் வகையில் உள்ளது. எந்த சட்டமும் நிறைவேற்றப்படாமல் இந்த நடைமுறை பின்பற்றப்படுவதால், முக அடையாள தொழில்நுட்பத்தை சட்டவிரோதமானது என அறிவிக்கவேண்டும். தமிழகம் முழுவதும் அமல்படுத்தப்படும் முக அடையாள தொழில் நுட்பத்துக்கு தடை விதித்து உத்தரவிட வேண்டும்" என்று மனுவில் கோரியிருந்தார்.

இந்த மனு, தலைமை நீதிபதி சஞ்சய் கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், "எந்த ஆய்வும் மேற்கொள்ளாமல், சட்ட அங்கீகாரம் இல்லாமல் முக அடையாள தொழில்நுட்பம் பின்பற்றப்படுகிறது" என்று வாதிடப்பட்டது. இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், இந்த மனுவுக்கு தமிழக உள்துறை செயலாளர், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆகியோர், அக்டோபர் 5ம் தேதிக்குள் பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை ஒத்திவைத்தனர்.

# புதுவை அரசால் அமைக்கப்பட்ட ஓ.பி.சி. வாக்காளர்கள், நெறிமுறைகள் குறித்து விளக்க கூட்டம் நடைபெற்றது




காரைக்கால், ஆக,22

புதுவை அரசால் அமைக்கப்பட்ட ஓ.பீ.சி. ஆணையத்தின் தலைவர் நீதியரசர் ஓய். சசிதரன் தலைமையில் நேருநகரில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் கல்வியியல் கல்லூரியில் சுமார் 300-க்கும் மேற்பட அங்கன்வாடி ஊழியர்களுடன் வீடு தோறும் சென்று ஓ.பி.சி. வாக்காளர்கள் விவரம் சேகரிக்கும் போது கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்து விளக்க கூட்டம் நடைபெற்றது.

மேலும் இந்த நிகழ்வில் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி ராமபத்திரன் துணை மாவட்ட ஆட்சியர் ஜான்சன் துணை ஆட்சியர் வெங்கடகிருஷ்ணன் சட்ட அதிகாரி ஜான்சி உள்ளாட்சித் துறை துணை இயக்குனர் சுபாஷ், நகராட்சி ஆணையர் சத்யா, சமூக நலத்துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) ராஜேந்திரன் உள்ளிட்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். இவர்களுக்கு அளிக்கப்படும் வாக்காளர் குறிப்பேட்டின் புத்தகத்தில் சேகரிக்கும் விவரங்களை பதிவிட வேண்டும் எனவும் இவர்களுக்கு புத்தகத்தை காண்பித்து ஒவ்வொரு பக்கமாக தாங்கள் செய்ய வேண்டிய பணிகள் குறித்து விளக்கமாக பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும் வீடு தோரும் நீங்கள் சென்று தகவல் சேகரிக்கும் போது குறிப்பேட்டில் உள்ள வாக்காளர் குறிப்பிட்ட வீட்டில் இல்லை என்றால் அந்த விவரத்தை அதற்காக ஒதுக்கப்பட்ட பக்கத்தில் தெரிவிக்க வேண்டும் என்றும் மேலும் அங்கு குடியிருந்த குறிப்பிட்ட வாக்காளர் தற்போது வேறு எங்கே குடியிருக்கிறார் என்ற விவரம் தெரிய வந்தாலும் அந்த விவரத்தையும் கையேற்றில் அதற்காக ஒதுக்கப்பட்ட பக்கத்தில் தெரிவிக்க வேண்டும் என்றும் பயிற்சி அளிக்கப்பட்டது.

விரைவில் தகவல் அளிக்கும் வீட்டின் உரிமையாளரிடம் பதிவேட்டில் கையொப்பம் பெற வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் அங்கன்வாடி ஊழியர்கள் கேட்ட சில சந்தேகங்களுக்கும் ஆணையம் தெளிவான பதிலை அவர்களுக்கு அளித்தார்கள். இந்த விபரங்கள் அனைத்தும் உள்ளாட்சித்தேர்தலுக்காக நடைபெறும் பணி ஆகும்.

மேலும் உங்கள் களப்பணியை ஆணையத்தின் சார்பில் சம்பந்தப்பட்ட நகராட்சி அல்லது பஞ்சாயத்து அலுவலர்கள் அவ்வப்போது வந்து ஆய்வு செய்வார்கள் என்றும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

# காரைக்காலில் விபச்சார வழக்கில் பெண் உட்பட 3 பேர் கைது ஒரு கார் உள்ளிட்ட 10 லட்சம் மதிப்பிலான பொருட்கள் பறிமுதல்



காரைக்கால், ஆக22-

காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட வடமட்டம் முக்குட்டு ஆலமரம் பகுதியில் உள்ள ஆப்பிள் நகரில் ஒரு வீட்டில் விபச்சாரம் நடப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. தகவலை அடுத்து நேற்று இரவு 11 மணி அளவில் நெடுங்காடு காவல் நிலைய போலீசார் ஆப்பிள் நகர் பகுதிக்குச் சென்று அந்த வீட்டில் சோதனை செய்ய முயன்ற போது, போலீசாரை கண்டதும் ஒரு பெண் உள்ளிட்ட நான்கைந்து பேர் தப்பி ஓட முயற்சித்து உள்ளனர்.

அப்போது அவர்களில் சிலரை போலீசார் துரத்தி பிடித்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் ராதா என்பவர் அவரது வீட்டில், சேலம் மாவட்டம் ஆத்தூர் பகுதியை சேர்ந்த பிரபாவதி (26), கரூர் மாவட்டம் காந்திகிராமம் பகுதியை சேர்ந்த சுஸ்மிதா (20), மயிலாடுதுறை மாவட்டம் எடுத்துக்கட்டி சாத்தனூர் பகுதியை சேர்ந்த முகமது கஜாலி, மயிலாடுதுறை மாவட்டம் வேலங்குடி பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் ஆகியோர்களை வைத்து விபச்சார தொழில் செய்தது தெரிய வந்தது. இதனை அடுத்து விபச்சார தொழிலுக்கு பயன்படுத்திய ஒரு கார், ஆறு செல்போன்கள்.

இரண்டு மோட்டார் சைக்கிள், ரூபாய் 8000 ரொக்கம், ஐந்து பாக்கெட் ஆணுறை உள்ளிட்ட 10 லட்சம் மதிப்பிலான பொருட்களை கைப்பற்றிய நெடுங்காடு போலீசார், தனது வீட்டில் விபச்சார தொழில் நடத்திய ராதா மற்றும் முகமது கஜாலி, விஜயகுமார் ஆகிய மூவர் மீது வழக்கு பதிவு செய்து நெடுங்காடு போலீசார் நடவடிக்கை மேற்கொண்டனர்.

மூவரையும் காரைக்கால் குற்றவியல் நீதிமன்ற நீதிபதி முன் ஆஜர் படுத்தி காரைக்கால் சிறையில் அடைத்தனர். வீட்டில் வைத்து விபச்சார தொழில் செய்த சம்பவம் நெடுங்காடு பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஆவுடையார்கோவில் அருகே மேனேஜர் இல்லாமல் இயங்கும் கனரா வங்கி



ஆவுடையார்கோவில், ஆக.22-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் அருகே உள்ள கரூர் கிராமத்தில் கனரா வங்கி ஒன்று செயல்படுகிறது இதன் அருகாமையில் 30க்கும் மேற்பட்ட கிராமங்கள் இந்த வங்கிக்கு தான் வர வேண்டும், இந்த பகுதி விவசாயம் நிறைந்த பகுதி இந்த வங்கியின் விவசாயிகள் விவசாய கடன் பெறவேண்டும் என்றால் வங்கியில் மேனேஜர் இருந்தால்தான் அதை பெற முடியும், கடந்த ஆறு மாத காலங்களாக இந்த வங்கியில் மேனேஜர் இல்லாததால் விவசாயிகள் பெரும் அவதிக்கு உள்ளாகின்றனர்.

தற்பொழுது விவசாய நேரம் விவசாயிகள் விதை உரம் வாங்க இந்த வங்கிக்கு சென்று கடன் பெறலாம் என்று நினைத்து சென்றாள், அங்கு மேனேஜர் இல்லை என்று கூறுகிறார்கள், அதனால் பெரும் அவதிக்கு உள்ளாகும் விவசாயிகள் இதை கருத்தில் கொண்டு மத்திய மாநில அரசு இந்த பொதுத்துறை வங்கியான கனரா வங்கிக்கு உடனடியாக அந்த வங்கியின் மேல் அதிகாரிகளை தொடர்பு கொண்டு உடனடியாக கிளை மேலாளரை நியமிக்குமாறு அப்பதி மக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

# அதிமுக மாநாட்டில் கலந்துகொண்ட 8 பேர் சாலை விபத்துகளில் உயிரிழப்பு இபிஎஸ் நிதியுதவி அறிவிப்பு



சென்னை, ஆக22-

மதுரையில் நடந்த அதிமுக மாநாட்டுக்கு வருகை தரும்போதும், மாநாடு முடிந்து வீடு திரும்பும்போதும் நிகழ்ந்த சாலை விபத்துகளில் உயிரிழந்த 8 பேரின் குடும்பத்தினருக்கு அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளார். மேலும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 6 லடசம் நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், 'அதிமுக வீர வரலாற்றின் பொன்விழா எழுச்சி மாநாடு 20.08.2023 அன்று மதுரையில் மிகவும் எழுச்சியுடன் நடைபெற்றது. கட்சியின் சார்பில் நடைபெற்ற மாநாட்டில் தன்னெழுச்சியோடு கலந்து கொள்வதற்காக, நிர்வாகிகளும், தொண்டர்களும் வருகை தரும்போதும், மாநாடு முடிந்து வீடு திரும்பும்போதும் எதிர்பாராத விதமாக, விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த பொன்னுசாமி; திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த சென்னையன்; கோவை மாவட்டத்தைச் சேர்ந்த, கதிரேசன்; கோவை புறநகர் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த. பழனிச்சாமி; கோவை புறநகர் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாரிமுத்து; தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த வாசுதேவன்; விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த கடற்கரை; புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த சாம்பசிவம்; ஆகியோர் மரணமடைந்துவிட்டனர் என்ற செய்தி கேட்டும்; வாகனங்களில் செல்லும் போது எதிர்பாராத விதமாக நிகழ்ந்த சாலை விபத்தில் சிலர் காயமடைந்துள்ளனர் என்ற செய்தி கேட்டும், ஆற்றொணாத் துயரமும், மிகுந்த மனவேதனையும் அடைந்தேன்.

நிர்வாகிகளும், தொண்டர்களும், சாலைகளில் பயணம் செய்யும்போது, மிகுந்த பாதுகாப்புடனும், எச்சரிக்கையுடனும் தங்கள் பயணங்களை மேற்கொள்ள வேண்டும் என்று அவ்வப்போது நான் வலியுறுத்தி வரும் நிலையில், இதுபோன்ற விரும்பத்தகாத விபத்துகள் நடைபெற்று, கட்சியினர் உயிரிழப்பதும், காயங்கள் அடைவதும், மேலும் என்னை வேதனையில் ஆழ்த்துகிறது.

கட்சியின் மீதும், கட்சித் தலைமையின் மீதும் மிகுந்த விசுவாசம் கொண்டிருந்த பொன்னுசாமி, சென்னையன், கதிரேசன், பழனிச்சாமி, மாரிமுத்து, வாசுதேவன், கடற்கரை மற்றும் சாம்பசிவம் ஆகியோரை இழந்து வாடும் அவர்களது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், மரணமடைந்தோர்களது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். மேலும், அவர்களது குடும்பத்துக்கு கட்சியின் சார்பில் தலா 6 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், வாகன விபத்துகளில் படுகாயமடைந்து, மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு, மருத்துவ சிகிச்சைக்காக கட்சியின் சார்பில் தலா 1,50,000 ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50,000 ரூபாயும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், காயமடைந்தவர்கள் விரைவில் பூரண நலம்பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்' என்று அவர் கூறியுள்ளார்.

# தமிழகத்தில் டாஸ்மாக் கடைகள் அனைத்தும் கணினிமயம் அமைச்சர் முத்துசாமி தகவல்



ஈரோடு, ஆக22-

"தமிழகத்தில் உள்ள டாஸ்மாக் கடைகள் அனைத்தையும் கணினிமயமாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இந்தப் பணிகள் இரண்டொரு மாதங்களில் முடிக்கப்படும். 500 டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டுள்ளன. புதிதாக எங்கும் டாஸ்மாக் கடைகள் திறக்கப்படவில்லை" என்று தமிழக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் முத்துசாமி கூறியுள்ளார்.

ஈரோட்டில் தமிழக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் முத்துசாமி நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "தமிழகத்தில் உள்ள டாஸ்மாக் கடைகள் அனைத்தையும் கணினிமயமாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இந்தப் பணிகள் இரண்டொரு மாதங்களில் முடிக்கப்படும். அவ்வாறு செய்யும்போது, மதுபானங்கள் எங்கே வாங்கப்பட்டது முதல் வழியில் ஏதாவது தவறுகள் நடந்தால்கூட தெரிந்துவிடும். டாஸ்மாக் கடைகளில் ரசீது வழங்கப்படும். மதுபானங்கள் டாஸ்மாக் கடைகளுக்கு வந்து விற்பனை செய்யப்படுவது வரை, அவற்றை கண்காணித்துக் கொள்ள முடியும்.

தமிழகத்தில் 500 டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டிருக்கிறது. எந்த கடையும் புதிதாக திறக்கப்படவில்லை. மூடப்பட்டுள்ள கடைகள் தவிர, எங்காவது பள்ளி, கோயில் அருகில் இருப்பதாக பொதுமக்கள் குற்றம்சாட்டினால், அந்த கடைகளை வேறு இடங்களுக்கு மாற்றும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். எனவே, புதிதாக தமிழகத்தில் டாஸ்மாக் கடைகள் எதுவும் திறக்கப்படவில்லை. 500 கடைகள் அடைக்கப்பட்டது அடைக்கப்பட்டதுதான். அதே நேரம், பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கின்ற கடைகளை வேறு இடத்துக்கு மாற்றி வைப்பதற்கான சூழல் இருந்தால், அதை செய்வதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

டாஸ்மாக் பணியாளர்கள் அரசிடம் 49 கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். அதில் ஏறத்தாழ பேச்சுவார்த்தை நடத்தி 39 கோரிக்கைகளுக்குத் தீர்வு கண்டிருக்கிறோம். ஊதியப்பேச்சுவார்த்தை என்பது மற்ற துறைகளையும் ஒப்பிட்டு செய்ய வேண்டிய ஒரு பணி. அதை தனித்து நேரடியாக செய்ய முடியாது, மற்ற துறையுடன் ஒப்பிடச் செய்ய வேண்டியுள்ளது" என்று அவர் கூறினார்.



புதுக்கோட்டை கீழ இரண்டாம் வீதியில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் நகர காங்கிரஸ் தலைவர் வீரையாவின் நிறுவனமான மேப் டெக்ஸ்டைல்ஸ் & டைலர்ஸ் நிறுவனத்தின் திறப்பு விழாவில் முன்னாள் மத்திய, மாநில அமைச்சரும் திருச்சி பாராளுமன்ற உறுப்பினருமான சு.திருநாவுக்கரசர் திறந்து வைத்து வாழ்த்தினார். நிகழ்வில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை எம்.எல்.ஏ முத்துராஜா, காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணி கட்சி பிரமுகர்கள், வர்த்தக, வணிகர்கள், மேப் வீரையா குடும்பத்தார் ஆகியோர் உடன் உள்ளனர்.

# ஆவுடையார்கோவில்அருகே ஸ்ரீ அங்கயர்கன்னி உடனுறை ஸ்ரீ அகதீஸ்வரர் பெருமாள் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேக விழா

ஆவுடையார்கோவில், ஆக.22-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோயில் அருகே துஞ்சனூர்ஸ்ரீ அங்கயர் கன்னி அம்மை உடனுறை. ஸ்ரீ அகதீஸ்வரர் பெருமாள் திருக்கோவில் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.



ஆவுடையார்கோயில் தாலுகா துஞ்சனூர்கிராமத்தில் அமைந்து அருள்பாலித்து வரும் ஸ்ரீ அங்கயர்கன்னி அம்மையார் உடனுறை ஸ்ரீ அகத்தீஸ்வரர் பெருமாள் ஆலயத்தில் திருப்பணிகள் முடிவுற்று கும்பாபிஷேகம் நடத்துவதென அப்பகுதி கிராம மக்களால் முடிவு செய்யப்பட்டது. இதற்காக சிறந்த யாகசாலை அமைத்து கடந்த 19ம் தேதி ஞாயிற்றுக்கிழமை கணபதி ஹோமத்துடன் விழா தொடங்கியது.

அதனை தொடர்ந்து 2நாட்களாக யாக பூஜை நடைபெற்று வந்தது. விழாவின் முக்கிய நிகழ்வாக நேற்று பல்வேறு பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பெற்று பூஜிக்கப்பட்ட புனித நீரோடு கடம்புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது. அதனை தொடர்ந்து ஹரிஹரன் ஐயா தலைமையில் சிவாச்சாரியார்கள் வேதமந்திரங்கள் முழங்க மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகத்தைக் காண திரண்டிருந்த அப்பகுதியை சுற்றியுள்ள ஆயிரத்திற்கும்மேற்பட்ட கிராம மக்கள், ஆன்மீக மெய்யன்பர்கள் சாமி தரிசனம் செய்தனர், அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது, கடூர் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.



தென்காசி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி பொறுப்புகளுக்கு புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் மாவட்டத் தலைவராக விஜயபாண்டியன், துணைத் தலைவராக வெங்கடேசன், மாவட்ட அமைப்பாளராக அழகுதுரை, துணை அமைப்பாளர்களாக சேதுசுப்பிரமணியன், ராஜராஜன் பிரகாஷ் ,சந்திரசேகரன், பாரதிராஜா, கார்த்திக்குமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். புதிதாக நியமிக்கப்பட்ட சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகள் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏவை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

அரியலூர் மாவட்டம்

# எம்.ஆர்.சி. கல்வி நிறுவன வளாகத்தில் மாவட்ட, மாநில அளவிலான கபாடி போட்டிகள்

அரியலூர், ஆக.22-

தத்தனூர் எம் ஆர் சி கல்வி நிறுவன வளாகத்தில் மாவட்ட மற்றும் மாநில அளவிலான கபாடி போட்டிகள் நடைபெறுகிறது. இது பற்றி அதன் தாளாளர் எம். ஆர். ரகுநாதன் வெளியிட்ட செய்தி குறிப்பில்,



அரியலூர் மாவட்டம், தத்தனூர் மீனாட்சி ராமசாமி கல்வி நிறுவன வளாகத்தில், கோவை ஈஷா மையம் சார்பில் "ஈஷா கிராமோத்சவம்" நிகழ்ச்சியின் கீழ், நடைபெற உள்ள மாநில அளவிலான கபாடிப் போட்டிக்காக, அரியலூர் மாவட்ட அளவிலான கபாடிப் போட்டி, ஆகஸ்ட் 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது.

இதில் வெற்றி பெறுபவர்களுக்கு ரூபாய் 12,000, 8,000 மற்றும் 5,000, என ரொக்க பரிசுகள் வழங்கப்படும். இப்போட்டியில் அரியலூர் மாவட்டத்தை சார்ந்த கபாடி விளையாட்டு வீரர்கள் கலந்து மட்டும் கொள்ளலாம். கலந்து கொள்ள விரும்புகின்றவர்கள், தங்களை பற்றிய விபரங்களை, 83000 30999 என்ற எண்ணில் முன்பதிவு செய்து கொள்ளவேண்டும் முன்பதிவு செய்யாத அணிகள் நேரடியாக ஆடுகளத்தில் விளையாட அனுமதி கிடையாது.

மாவட்ட அளவில் வெற்றி பெறுகின்றவர்கள், செப்டம்பர் 23 அன்று நடைபெறும், மாநில அளவிலான போட்டியில் கலந்துகொள்ள தேர்வு செய்யப்படுவார்கள். மாநில அளவில் முதல் பரிசு ரூ.5 இலட்சம், இரண்டாம் பரிசு ரூ.3 இலட்சம், மூன்றாம் பரிசு ஒரு இலட்சம் ரூபாய், நான்காம் பரிசு ரூ.50 ஆயிரம் ஆகும். மேலும் விபரங்களுக்கு 97 51 97 00 07 என்கிற மொபைல் எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



சுதந்திர போராட்ட வீரர் தியாகி ஒண்டிவீரனின் 252-வது பிறந்தநாள் தினத்தை முன்னிட்டு சென்னை காங்கிரஸ் கட்சி அலுவலகம் சத்தியமூர்த்தி பவனில் அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி வீரவணக்கம் செலுத்தினர். நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஏசி துறை மாநிலத் தலைவர் மத்திய சென்னை, மேற்கு மாவட்டத் தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் சொத்து பாதுகாப்பு துறைத் தலைவர், ஏ ஐ சி சி மெம்பர் இலங்கை இளைஞர் காங்கிரஸ் தலைவர் எம். பி. ரஞ்சன் குமார், தென்காசி எஸ்சி ,எஸ்டி பிரிவு மாவட்டத் தலைவர் பி. ராமச்சந்திரன், ஏ ஐ சி சி மெம்பர் மருத்துவ உமா பாலன், மற்றும் காங்கிரஸ் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

# காலமானார்

புதுக்கோட்டை மாதவி ரைஸ்மில் நிறுவனர் **K. வீரையா** (Ex.M.P.) அவர்களின் சகோதரரும்,

தெய்வத்திரு. **K. சிதம்பரம்**, முன்னாள் தி.மு.க. மாவட்ட செயலாளர் அவர்களின் துணைவியாரும்,

**V. ஆசைத்தம்பி *K.V.HONDA*** உரிமையாளர் அவர்களின் தாயாருமாகிய



## திருமதி. C.ராஜேஸ்வரி அம்மையார் அவர்கள்

நேற்று முன்தினம் (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார். அமையாரின் இறுதி ஊர்வலம் நேற்று (21.08.2023) திங்கட்கிழமை மாலை 3.00 மணி அளவில் அவர்களது இல்லத்தில் இருந்து நடைபெற்றது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வருத்தத்துடன்....

***K.V.HONDA*** மற்றும் **மாதவி ரைஸ்மில்**

**குடும்பத்தார்கள் மற்றும் ஊழியர்கள், புதுக்கோட்டை.**

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.




# சந்திரயான்-3 நிலவில் தரையிறங்குவதில் எந்த சிக்கலும் இருக்காது: இஸ்ரோ

# ஆபாச படங்களை நீக்குவதில் தாமதம் பேஸ்புக் மீது வழக்கு பதிவு






# அதிமுக மாநாடு: ஜீரணிக்க முடியாதவர்கள் சாப்பாடு பிரச்சனையை கிளப்புகின்றனர்

சென்னை / புதுக்கோட்டை | 22.08.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஹரிசங்கர் பரசாயி , இந்திய எழுத்தாளர் (பி.1924) (இ.1995)



சிரஞ்சீவி , இந்திய நடிகர், அரசியல்வாதி (பி.1955)



ஆனந்த குமாரசுவாமி , இலங்கை வரலாற்றாளர், மெய்யியலாளர், நூலாசிரியர் (பி.1877) (இ.1947)



## இன்றைய நினைவு நாள்


வாரன் ஹேஸ்டிங்ஸ் , இந்தியாவின் 1வது தலைமை ஆளுநர் (பி.1732) (இ.1818)



ஏக்நாத் ராமகிருஷ்ண ரானாடே , இந்திய விடுதலைப் போராட்ட வீரர், சீர்திருத்தவாதி (பி.1914) (இ.1982)



சோபா சிங் , இந்திய ஓவியர் (பி.1901) (இ.1986)



## சென்னை நாள் (தமிழ்நாடு)